Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, நவம்பர் 10, 2024 | இதழ் 211

# மக்களுக்கு பயன்படாத திட்டங்களை செயல்படுத்துகிறோமா? ஏக்கர் கணக்கில் பொய் சொல்கிறார்
# புளுகு மூட்டை எடப்பாடி: முதல்வர் ஸ்டாலின் தாக்கு ஆணவப் பேச்சால் தொடர்ந்து தோல்வியை சந்திக்கிறார்

சென்னை, 10 நவம்பர் 2024: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், விருதுநகரில் நடைபெற்ற விழாவில், வெம்பக்கோட்டை அகழ்வராய்ச்சி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, நான் முதல்வர் திட்டம் தமிழ்ப்புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்தும், வேளாண்மை உழவர் நலத்துறை, வருவாய்த் துறை, சமூக நலத்துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பிலும் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கினை பார்வையிட்டார்.

எடப்பாடி தொடர்ந்து புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார். ஏக்கர் கணக்கில் பொய் சொல்கிறார். ஆணவமாக பேசுகிறார்; அவரது தொடர் தோல்விக்கு இது தான் காரணம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடுமையாக தாக்கினார்.

மக்களுக்கு பயன்படாத திட்டங்களை செயல்படுத்துவதாக எடப்பாடி கூறி வருகிறார் என குறிப்பிட்ட முதலமைச்சர், மக்களுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை ஒவ்வொன்றாக எடுத்து கூறி பதில் அளித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று விருதுநகர் மாவட்டம், பட்டம்புதூர் நடைபெற்ற அரசு விழாவில் பேசியதாவது:

சில நாட்களுக்கு முன்னால், இந்தியாவின் புகழ்பெற்ற பத்திரிகையான இந்தியா டுடே, இந்தியாவின் சக்தி வாய்ந்த 'டாப் 10' தலைவர்கள் பட்டியலில் என்னுடைய பெயரையும் குறிப்பிட்டு இருந்தார்கள். இது தனிப்பட்ட ஸ்டாலினுக்குக் கிடைத்த பெருமையோ, புகழோ இல்லை. இந்த பெருமையையும், புகழையும் வழங்கியது, தமிழ்நாட்டு மக்களான நீங்கள்தான்! உங்களுடைய அன்பும், ஆதரவும்தான் இந்த ஸ்டாலினின் பலம்! தமிழ்நாட்டை உயர்த்த நான் என்னுடைய சக்தியை மீறியும் உழைப்பேன்! போராடுவேன்!

இந்த உழைப்பின் பயன்தான், அனைத்து புள்ளி விவரங்களையும் வெற்றிகரமாக இன்றைக்கு எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. பேப்பரிலும், ரெக்கார்ட்டுகளிலேயும் 'ஃபர்ஸ்ட் வந்துவிட்டோம்' என்று நான் ஒருபோதும் திருப்தி அடைவதில்லை. ஏனென்னால், நமக்கு பின்னால், நம்மை முந்தி வெற்றி பெறவேண்டும் என்று இன்னும் பலர் வந்து கொண்டு இருக்கிறார்கள்.



எனவே, இன்னும் வேகமாக ஓட வேண்டும் என்றுதான் நான் நினைக்கிறேன். இதைத்தான் நான் மற்ற அமைச்சர்களிடமும், அரசு அலுவலர்களிடமும் எதிர்பார்க்கிறேன்!

அந்த எதிர்பார்ப்புடன் தான் மாவட்டம்தோறும் கள ஆய்வை தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிறேன். இது பற்றியெல்லாம் எதுவும் புரியாத ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மக்கள் நலனைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாத எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி என்ன சொல்கிறார்..

"மக்கள் நலத்திட்டங்களுக்கு மூலதனச் செலவுகளை மேற்கொள்ளாமல், கலைஞர் பெயரில், மக்களுக்குப் பயன்படாத திட்டங்களுக்கு கோடிக்கணக்கான நிதியை நான் ஒதுக்கி வருவதாக" உளறியிருக்கிறார்.

அதை படித்ததுமே சிரிப்புதான் வந்தது. ஒருவர் பொய் சொல்லலாம்; ஆனால் ஏக்கர் கணக்கில் சொல்லக்கூடாது என்று வேடிக்கையாக சொல்லுவார்கள். அதை இனிமேல், கொஞ்சம் மாற்றி பொய் சொல்லலாம்; ஆனால், பழனிசாமி அளவுக்கு பொய் சொல்லக் கூடாது என்றுதான் இப்போது சொல்லவேண்டும். அந்த அளவுக்குப் புளுகுமூட்டையை அவிழ்த்து விடுகிறார்.

நம்முடைய ஆட்சியில், நவீனத் தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பி கலைஞர் பெயரால், மக்கள் நலனுக்காக நாம் செய்து கொண்டு வருகின்ற மூலதனச் செலவுகள், என்னென்ன; எளிய மக்களுக்கான நலத்திட்டங்கள் என்னென்ன; என இதே மேடையில் என்னால் மணிக்கணக்கில் சொல்ல முடியும். நான் கேட்கிறேன்.

எதை நீங்கள் மக்களுக்குப் பயன்படாத திட்டம் என்று சொல்கிறீர்கள்?

தமிழ்நாட்டின் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டுக்காக கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கம் அமைத்திருக்கிறோமே. அதை பயன்படாத திட்டம் என்று சொல்கிறீர்களா?

இல்லை, தென் தமிழ்நாட்டு மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் அறிவுச் சுரங்கமாக மதுரையில் இருக்கின்ற கலைஞர் நூற்றாண்டு நூலகம். அதை பயன்படாத திட்டம் என்று சொல்கிறீர்களா?

இல்லை, ஆயிரக்கணக்கான மக்களுடைய உடல்நலனையும் - உயிரையும் காப்பாற்றுகின்ற கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை.. அதை பயனில்லை என்று சொல்கிறீர்களா?

இல்லை, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒரு கோடியே 20 லட்சம் தாய்மார்கள் மாதந்தோறும் 1000 ரூபாய் வாங்குகின்ற, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' அதை பயன்படாத திட்டம் என்று சொல்கிறீர்களா?

எதைச் சொல்கிறீர்கள்கள்? பழனிசாமி அவர்களே! எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்களே! இப்படி வாய்த்துடுக்காவும், ஆணவமாவும் பேசி பேசித்தான் தொடர்ந்து தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நான் உறுதியாக சொல்கிறேன். உங்கள் ஆணவத்துக்காகவே, தமிழ்நாட்டு மக்கள் உங்களை இனிமேல் தோற்கடித்துக் கொண்டுதான் இருப்பார்கள். அது உறுதி! நான் கேட்கிறேன்ஞ் தமிழ்மொழி, தமிழ் இனம் தமிழ்நாட்டை காக்க 80 ஆண்டு காலம் ஓயாமல் உழைத்த, கலைஞர் பெயரை மக்கள் நலத் திட்டங்களுக்கு வைக்காமல், யார் பெயரை வைப்பது? பதவி சுகத்துக்காக, கரப்பான்பூச்சி மாதிரி தரையில் ஊர்ந்து சென்றீர்களே, உங்கள் பெயரையா வைக்க முடியும்? என்ன பேசுகிறீர்கள்? 'கலைஞர்' என்பது தமிழர்களின் மனதில் பொறிக்கப்பட்ட பெயர். தமிழ்நாட்டின் வரலாற்றில் தவிர்க்க முடியாத அடையாளம்.

கலைஞர் தான் - என்நாளும் தமிழ்நாட்டைக் காக்கும் காவல் அரண். அவருடைய கொள்கைகள், சிந்தனைகளைதான் நான் செயல்படுத்திக் கொண்டு வருகிறேன். விடியல் பயணம், புதுமைப்பெண், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நான் முதல்வன் தமிழ்ப்புதல்வன் என்று இந்த திராவிட மாடல் அரசின் மக்கள் நலத் திட்டங்கள் எல்லாமே கலைஞர் பெயரைத்தான் சொல்லுகிறது!

கலைஞரின் பிள்ளையாக மட்டுமல்ல, கலைஞருடைய தொண்டனாகவும் இதை நான் பெருமையாக சொல்கிறேன். எங்கள் தலைவர் பெயரால், தமிழ்நாட்டு மக்களை வாழவைக்கும் திட்டங்களை நிறைவேற்றியதில் நான் பெருமிதப்படுகிறேன்.

கலைஞரின் புகழ் வெளிச்சம், இந்தியா முழுக்க பரவி இருக்கிறது. அந்த வெளிச்சம் பழனிசாமியின் கண்களை கூச வைக்கிறது. அவ்வளவுதான். திராவிட மாடல் ஆட்சியின் புகழ் வெளிச்சத்தில் புதுவெளிச்சம் தேடும் புற்றீசல்கள் காணாமல் போகும்! என்னை பொறுத்தவரையில், என்றும் எப்போதும் உங்களுக்கு உறுதுணையாக உங்கள் வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் ஒரு சேவகனாக என்னுடைய பணிகள் தொடரும். இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

# 400க்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவர் 10 ஆண்டுகள் ராணுவத்தில் பணிபுரிந்தவர்
# நடிகர் டெல்லி கணேஷ் காலமானார் முதலமைச்சர் ஸ்டாலின் இரங்கல்

சென்னை, 10 நவம்பர் 2024: வயது முதிர்வு காரணமாக நகைச்சுவை, குணச்சித்திர நடிகர் டெல்லி கணேஷ் (வயது 80) இன்று காலமானார். அவரது மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

வயது முதிர்வு காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு சென்னை ராமாபுரத்தில் உள்ள வீட்டில் நேற்று இரவு தூக்கத்திலேயே





அவரது உயிர் பிரிந்தது. டெல்லி கணேஷ் உடலுக்கு உறவினர்கள் மற்றும் திரை உலகினர், ரசிகர்கள் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். நடிகர்கள் சிவக்குமார், கார்த்தி, செந்தில், சத்யராஜ், சார்லி, ரமேஷ் கண்ணா, மணிகண்டன், இயக்குனர்கள் வெற்றிமாறன், வசந்த் உள்ளிட்டோர் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள். டெல்லி கணேஷின் இறுதிச் சடங்குகள் நாளை காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

டெல்லி கணேஷின் மறைவுக்கு திரைத்துறையை சேர்ந்த பலரும் சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

'டெல்லி' கணேஷ் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

மூத்த திரைக்கலைஞர் 'டெல்லி' கணேஷ் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

நாடகத்தில் இருந்து திரைத்துறைக்கு வந்து, தன்னுடைய அடையாளத்தை அழுத்தமாகப் பதித்தவர் டெல்லி கணேஷ். 400 -க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ள அவரது நகைச்சுவைக் காட்சிகள் இன்றளவும் மக்களால் மீண்டும் மீண்டும் பார்க்கப்படும் அளவுக்குச் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தக் கூடியவராக அவர் திகழ்ந்தார்.

வெள்ளித்திரை மட்டுமல்லாது சின்னத்திரையிலும் டெல்லி கணேஷ் பல தொடர்களில் நடித்து முத்திரை பதித்துள்ளார். கலைஞரின் எழுத்தில் உருவான இளைஞன் திரைப்படத்திலும் டெல்லி கணேஷ் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# அவதூறு வழக்கு: நடிகை கஸ்தூரி தலைமறைவு

சென்னை, 10 நவம்பர் 2024: அவதூறு வழக்குத் தொடர்பாக நடிகை கஸ்தூரிக்கு போலீசார் சம்மன் அனுப்பிய நிலையில் சென்னையில் உள்ள அவரது வீடு பூட்டப்பட்டுள்ளதால் அவர் தலைமறைவாகியதாக கூறப்படுகிறது.



தமிழ் திரைப்பட நடிகை கஸ்தூரி அண்மையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது, தெலுங்கு பேசும் மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசினார். அவரது இந்தப் பேச்சுக்கு தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, தெலங்கானாவிலும் கடும் கண்டனங்கள் குவிந்தன. தமிழக பாஜகவும் நடிகை கஸ்தூரியின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர். இதற்கிடையே நடிகை கஸ்தூரி தனது பேச்சுக்கு மன்னிப்புக் கோரினார். எனினும், அவர் மீது தமிழகம் முழுவதும் பல்வேறு காவல் நிலையங்களிலும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு வருகிறது. அவதூறு வழக்கில் நேரில் ஆஜராகுமாறு கஸ்தூரிக்கு போலீசார் சம்மன் அனுப்பியிருந்தனர். இந்த நிலையில், அவர் தலைமறைவு ஆனதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னையில் உள்ள வீட்டை பூட்டிவிட்டு கஸ்தூரி தப்பி சென்றதாகவும் அவரது செல்போன் எண்ணும் ஸ்விட்ச் ஆப் ஆகியிருப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து, கஸ்தூரியை போலீசார் தீவிரமாக தேடி வருகிறார்கள்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# சினிமா பிரபலங்களுக்கு போதைப் பவுடர் ‘சப்ளை‘: சின்னத்திரை துணை நடிகை எஸ்தர் கைது





சென்னை, 10 நவம்பர் 2024: சென்னையில் 'மெத்தம் பெட்டமைன்' எனும் உயர்ரக போதைப் பவுடருடன் துணை நடிகை கைது செய்யப்பட்டார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள பிரபல வணிக வளாகத்தின் 7-வது நுழைவுவாயில் அருகே இளம்பெண் ஒருவர் 'மெத்தம்பெட்டமைன்' போதைப் பவுடருடன் நின்றுக்கொண்டிருப்பதாக அண்ணா சாலை போலீசாருக்கு நேற்று மதியம் ரகசிய தகவல் கிடைத்துள்ளது. அதன்பேரில் போலீசார் அந்த வணிக வளாகத்துக்கு விரைந்து வந்தனர். அப்போது அந்த வணிக வளாகத்தின் 7-வது நுழைவு வாயில் அருகே சந்தேகத்துக்குரிய வகையில் இளம்பெண் ஒருவர் நின்றுக்கொண்டிருந்தார். அவரிடம் போலீசார் விசாரித்தபோது, முன்னுக்கு பின் முரணாக பதிலளித்துள்ளார். இதனால் அவர் வைத்திருந்த கைப்பையை போலீசார் சோதனையிட்டனர். இதில் 5 கிராம் ‘மெத்தம்பெட்டமைன்' போதைப் பவுடர் இருந்தது.

அதனை போலீசார் பறிமுதல் செய்தனர். பின்னர், அந்த இளம்பெண்ணை கைது செய்து போலீஸ் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினார்கள். விசாரணையில் அவர், சின்னத்திரை துணை நடிகை எஸ்தர் என்கிற மீனா (வயது 28) என்பது தெரிய வந்தது. அவருக்கு ராயப்பேட்டையைச் சோ□ந்த ஜேம்ஸ் (27) என்பவர் மெத்தம்பெட்டமைன் வழங்கியதும் தெரியவந்தது. இலங்கை தமிழரான இவர், கோவிலம்பாக்கம் வெள்ளக்கோவில் கண்ணதாசன் தெருவை சேர்ந்தவர்.

விசாரணையின்போது எஸ்தர், இந்த போதைப் பவுடரை பயன்படுத்தி இருக்கலாம் என்ற சந்தேகம் போலீசாருக்கு ஏற்பட்டது. எனவே அவர், ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரியில் உள்ள மத்திய உயிர் வேதியியல் ஆய்வு கூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதைத்தொடர்ந்து அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். கைதான துணை நடிகை மீனாவுக்கு வரும் 15ஆம் தேதி வரை நீதிமன்ற காவல் விதிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

தனி ‘நெட்வொர்க்' அமைத்து ‘மெத்தம்பெட்டமைன்' போதைப் பவுடர் விற்பனை நடைபெற்று இருக்கிறது. 'வாட்ஸ் அப்' மூலம் குழு அமைத்து சினிமா கலைஞர்களுக்கு சப்ளை செய்யப்பட்டு வந்துள்ளதாகவும் பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளது. எனவே விசாரணை வளையத்தை போலீசார் விரிவுப்படுத்தி உள்ளனர். துணை நடிகை எஸ்தரை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்கவும் போலீசார் திட்டமிட்டுள்ளனர்.

போதைப் பவுடர் வழக்கில் துணை நடிகையை கைது செய்துள்ள போலீசாருக்கு கமிஷனர் அருண் பாராட்டு தெரிவித்துள்ளார். இதன் பின்னணியில் உள்ள குற்றவாளிகளையும் விரைவில் கைது செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

போதைப் பொருட்களை கடத்தி வருபவர்கள், விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதுபற்றிய தகவல் தெரிந்தால் 78710 78100 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம் என்றும் போலீஸ் கமிஷனர் அருண் கேட்டுக்கொண்டுள்ளார்.

# லெபனானில் இஸ்ரேல் தொடர் தாக்குதல்: 40 பேர் பலி

சென்னை, 10 நவம்பர் 2024: லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில், குழந்தைகள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர்.

காசாவின் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த ஆண்டு அக்டோபர் 7ல் இஸ்ரேல் மீது கொடூர தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடி தரவும், ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக லெபனான் நாட்டில் இருந்து செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்பை முடக்கவும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

தற்போது லெபனான் மீதான இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் பல குழந்தைகள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர். தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதியில் நடந்த தாக்குதலில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த தாக்குதலில் உயரிழந்தவர்களை அடையாளம் காண, டி.என்.ஏ. சோதனை நடைபெற உள்ளது.

லெபனானில் கடந்த ஆண்டில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 3,136 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். இதில் 619 பெண்கள் மற்றும் 194 குழந்தைகள் அடங்குவர். 13,979 பேர் காயம் அடைந்துள்ளனர் என லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# கனடாவில் இந்து கோயிலை தாக்கிய பயங்கரவாதிக்கு ஜாமீன்

சென்னை, 10 நவம்பர் 2024: கனடாவில் கடந்த வாரம் ஹிந்துக் கோயிலில் பக்தர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் காலிஸ்தான் பயங்கரவாதியை போலீசார் கைது செய்து நிபந்தனை ஜாமினில் விடுவித்தனர்.

கனடாவின் பிராம்ப்டன் நகரில் ஹிந்து சபைக்கு சொந்தமான கோயில் உள்ளது. இப்பகுதியில் இந்திய தூதரகம் சார்பில் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. தூதரக அதிகாரிகள் வருகை எதிர்ப்பு தெரிவித்து காலிஸ்தான் பயங்கரவாதிகள் போராட்டம் நடத்தினர். அப்போது கோயிலில் இருந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட பக்தர்களை தங்களின் கொடியை வைத்து காலிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதனை கண்டித்து ஹிந்துக்கள் போராட்டம் நடத்தினர்.

இது தொடர்பாக அந்நாட்டு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த நிலையில், 4 பேரை கைது செய்தனர். அவர்களில் ஒருவன் காலிஸ்தான் பயங்கரவாத அமைப்பை சேர்ந்த இந்தர்ஜீத் கோசால் என்பவனும் ஒருவன். கனடாவில் கொல்லப்பட்ட காலிஸ்தான் பயங்கரவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜாருக்கு வேண்டப்பட்டவன் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக போலீசார் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: கடந்த 8 ம் தேதி கோசால் கைது செய்யப்பட்டான். ஆயுதங்களால் தாக்கப்பட்டதாக அவன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பிறகு நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டான். ஒண்டாரியோ நகர நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் போது அவன் ஆஜர் ஆவான் எனக்கூறியுள்ளனர்.

# டி20: நியூசிலாந்தை வீழ்த்திய இலங்கை அணி

சென்னை, 10 நவம்பர் 2024: நியூசிலாந்துக்கு எதிரான முதல் டி20 போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டி20 போட்டி தம்புல்லாவில் நேற்று நடைபெற்றது. இதில் 'டாஸ்' வென்று முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி 19.3 ஓவர்களில் 135 ரன்களில் ஆல் அவுட் ஆனது.

அதிகபட்சமாக பிரேஸ்வெல், ஜகாரி போல்க்ஸ் தலா 27 ரன்கள் எடுத்தனர். இலங்கை தரப்பில் துனித் வெல்லாலகே 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் 136 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இலங்கை அணி 19 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 140 ரன் சேர்த்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக கேப்டன் அசலன்கா 35 ரன்களும், குசல் பெரேரா, கமிந்து மென்டிஸ் தலா 23 ரன்களும் அடித்தனர். குசல் பெரேரா இந்தப் போட்டியில் அடித்த 23 ரன்களையும் சேர்த்து சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இதுவரை 1904 ரன்கள் அடித்துள்ளார். இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் அதிக ரன்கள் குவித்த இலங்கை வீரர் என்ற மாபெரும் வரலாற்றுச் சாதனையை அவர் படைத்துள்ளார்.

# புதிய படங்கள் தொடங்க தடை: தயாரிப்பாளர் சங்கத் தலைவர் பதவி விலக வேண்டும்! முன்னாள் தலைவர் கே ஆர் பரபரப்பு அறிக்கை !!



சென்னை, 10 நவம்பர் 2024: தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கம் மற்றும் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் முன்னாள் தலைவரும் பட அதிபருமான கே ஆர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ் திரைப்படத்துறை எப்போதும் இல்லாத வகையில் பலமுனை தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது. படம் எடுப்பதில் தொடங்கி வியாபாரம் ரிலீஸ் கலெக்ஷன் என்று அத்தனையுமே இன்று சவாலாக மாறிப் போயிருக்கிறது. பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து தீர்வு காண வேண்டிய தயாரிப்பாளர் சங்கம் நான்கு வருடங்களாக முடங்கிப் போய் கிடக்கிறது. நட்சத்திர நடிகர்கள் படங்களைத் தவிர மற்றவர்களுக்கு போஸ்டர் ஒட்டும் காசு கூட கிடைப்பதில்லை. சேட்டிலைட் வியாபாரம் ஓடிடி ஆடியோ ரைட்ஸ் கியூப் கட்டணம் டிக்கெட் புக்கிங் கட்டணம் உள்ளிட்ட எதையுமே முறைப்படுத்த முடியாவிட்டால் எதற்கு சங்கத்தலைவர் பதவி?

இத்தனை வருடங்களாக பொறுத்து பொறுத்துப் பார்த்து பொங்கி எழுந்த உறுப்பினர்கள், தலைமைக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரத் தயாராகிவிட்ட சூழ்நிலையில் அதை முறியடிக்கும் சுயநல சூழ்ச்சியுடன், நடிகர் தனுசுக்கு ரெட் கார்டு,

புதிய படங்களை தொடங்காமல் வேலை நிறுத்தம் என்று அரசியல் செய்ய ஆரம்பித்து விட்டார். இதைப் பற்றி எல்லாம் உறுப்பினர்கள் நேரடியாக கேள்வி கேட்கும் ஜனநாயக உரிமையை மறுக்கும் நோக்கத்தில் செப்டம்பர் மாதம் நடைபெற வேண்டிய பொதுக்குழு கூட்டத்தை கூட ரத்து செய்து விட்டார்.

வேலை நிறுத்தம், நடிகர்களுக்கு எதிராக ரெட் கார்டு போடுவது போன்ற முக்கியமான விஷயங்களை மற்ற சங்கங்களுடன் கலந்து பேசி பொதுக்குழுவில் விவாதித்து தான் முடிவு செய்ய வேண்டும்.

தனது சுயநலத்திற்காக தன்னிச்சையாக தீர்மானம் போடக்கூடாது. இது போன்று திடீரென்று மற்றவர்கள் தொழில் செய்வதற்கு தடை விதிப்பது விளிழிளிறிளிலிமிணிஷி கி ழி ஞி ஸிணிஷிஜிஸிமிசிஜிமி கூஷிணி ஜிஸிகிஞிணி றிஸிகிசிஜிமிசிணிஷி கிசிஜி ( விஸிஜிறி) சட்டத்திற்கு எதிரானதாக அமைந்துவிடக்கூடும் என்பது சங்கத் தலைவருக்கு தெரியுமா? தெரியாதா? அனுபவம் இல்லாமல் நேரடியாக பொறுப்புக்கு வருபவர்களால்தான் இப்படி பொறுப்பில்லாமல் யோசிக்க முடியும். பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கமுடியாத பிரச்சினைகளே கிடையாது என்பதுதானே திரையுலக வரலாறு.

தமிழக முதல் அமைச்சர்களில் திரைப்பட துறைக்கு அதிக உதவிகளையும் சலுகைகளையும் வழங்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டும் தான். அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்ட "கலைஞர்- 100" விழாவைக் கூட உங்களால் சிறப்பாக நடத்த முடியவில்லை. பல கோடிகள் வசூலித்தும் இன்னும் பலருக்கு பாக்கி இருக்கிறது. விழாவுக்கான வரவு செலவுகளை "வெள்ளை அறிக்கை"யாக வெளியிட வேண்டும் என்ற கோரிக்கைக்கும் இன்று வரை பதில் இல்லை.

நான் தலைவராக இருந்த போது அறக்கட்டளையிலும் சங்கத்திலும் சேர்த்து வைத்திருந்த சுமார் 11 கோடி ரூபாயை, விஷால் தலைமையிலான நிர்வாகத்தின் பொருளாளர் எஸ் ஆர் பிரபு " உறுப்பினர்களுக்கு உதவிகள் வழங்குவதற்கு அஞ்சு பைசா கூட இருக்காமல் செய்து விடுவோம்" என்று பகிரங்கமாக சவால் விட்டு கஜானாவையே காலி செய்தார்கள்.

1994 ல் சங்க உறுப்பினர்கள் நலனுக்காக நானும் கே.ஆர்.ஜி. அவர்களும் அறக்கட்டளையை உருவாக்கினோம். அதில் வரும் வட்டியை எடுத்து தான் உதவி செய்ய வேண்டுமே தவிர டெபாசிட் தொகையில் கை வைக்கக் கூடாது. அப்படி செய்தால் அது சட்டப்படி கிரிமினல் குற்றம். அறக்கட்டளைகள் வைத்திருப்பவர்கள் அனைவருக்கும் இந்த விஷயம் தெரியும்.

ஆனாலும் அவர்கள் மீது இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பணமும் மீட்கப்படவில்லை. எனவே எஸ்.ஆர். பிரபு, தற்போதைய தலைவர் முரளி, பொருளாளர் சந்திரபிரகாஷ் ஜெயின் ஆகியோர் மீது சட்டப்படி கிரிமினல் வழக்குத் தொடர உள்ளேன்.

தனது சொந்த பிரச்சினைகளில் இருந்து தப்பிக்க, அப்புராணி போல முகத்தை வைத்துக் கொண்டு, தலைவர் பதவியை ஒரு கேடயமாக பயன்படுத்திக் கொண்டிருப்பதை இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

இந்த சினிமா துறைக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்று முரளி நினைத்தால், அது உடனடியாக தனது பதவியை ராஜினாமா செய்வதாக மட்டுமே இருக்க முடியும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கே ஆர் கூறியுள்ளார்.

# தலைமை பயிற்சியாளர் பதவியிலிருந்து கம்பீரை நீக்க முடிவு?




சென்னை, 10 நவம்பர் 2024: தலைமை பயிற்சியாளர் பதவியிலிருந்து கம்பீரை நீக்க முடிவெடுக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக முன்னாள் வீரர் கவுதம் கம்பீர் செயல்பட்டு வருகிறார். 2007 மற்றும் 2011 உலககோப்பைகளை இந்தியா வெல்வதற்கு முக்கிய பங்காற்றிய அவர் ஐபிஎல் தொடரிலும் கேப்டனாக 2 கோப்பைகளை வென்ற அனுபவத்தைக் கொண்டுள்ளார். அத்துடன் 2024 சீசனில் ஆலோசகராக செயல்பட்ட அவர் 10 வருடங்கள் கழித்து கொல்கத்தா சாம்பியன் பட்டம் வெல்ல உதவினர். அதன் காரணமாக டி20 உலகக்கோப்பை வெற்றியுடன் ஓய்வு பெற்ற ராகுல் டிராவிட்டுக்கு பின் கவுதம் கம்பீர் புதிய பயிற்சியாளராக பொறுப்பேற்றுள்ளார்.

அவருடைய தலைமையில் இலங்கை டி20 தொடரில் வென்ற இந்தியா ஒருநாள் தொடரில் 27 வருடங்கள் கழித்து தோற்றது. அதனால் முதல் சுற்றுப்பயணத்திலேயே கம்பீர் சில கடுமையான விமர்சனங்களையும் சந்தித்தார். அதைத்தொடர்ந்து வங்காளதேசத்துக்கு எதிராக 2- 0 (2 போட்டிகள்) என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை சொந்த மண்ணில் இந்தியா வென்றது. ஆனால் அதன்பின் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஒயிட்வாஷ் ஆனது. இதனால் கம்பீர் மீது மிகுந்த விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பார்டர் - கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் இந்தியா வெல்ல வேண்டும் என்று பிசிசிஐ விரும்புகிறது. ஒருவேளை ஆஸ்திரேலியாவில் வெல்ல தவறினால் இந்திய டெஸ்ட் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியிலிருந்து கம்பீரை நீக்க பிசிசிஐ முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# மாற்ற இயலாத கடன் பத்திரங்கள் (என் சி டி) ஒதுக்கீட்டின் மூலம் ரூ.70 கோடி நிதியை திரட்டியிருக்கும் ஸ்டான்டர்டு கேப்பிட்டல் மார்கெட்ஸ் லிமிடெட்

சென்னை, 10 நவம்பர் 2024: வங்கி சாரா நிதி நிறுவனங்கள் துறையில் ஒரு பிரபல நிறுவனமான ஸ்டாண்டர்டு கேபிடல் மார்கெட்ஸ் லிமிடெட், தனிப்பட்ட ஒதுக்கீடு அடிப்படையில், ரூ. 1,00,000 முகமதிப்பு கொண்ட 7000 பாதுகாக்கப்பட்ட, பட்டியலிடப்படாத, தர நிலைப்படுத்தப்படாத, மாற்ற இயலாத என் சி டி-க்கள் (மாற்ற இயலாத கடன் பத்திரங்கள்) வெளியீட்டின் வழியாக ரூ.70 கோடி என்ற மொத்த தொகையைத் திரட்டுவதற்கு தனது இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது என்பதை இன்று அறிவித்திருக்றது. சமீபத்தில், தனிப்பட்ட ஒதுக்கீடு அடிப்படையில் ஒரு அல்லது அதற்கும் அதிகமான தொகுப்புகளில் ரூ 500 கோடி என்ற தொகை வரை 50,000 பாதுகாக்கப்பட்ட, பட்டியலிடப்படாத, தர நிலைப்படுத்தப்படாத, மீட்கக்கூடிய என் சி டி-க்கள் (மீட்கக்கூடிய கடன் பத்திரங்கள்) வெளியீடு திட்டத்திற்கு இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்திருந்தது. இன்டராக்டிவ் ஃபிளாட் பேனல்களை (ஐ எஃப் பி) வாங்குவதற்கு உதவ பள்ளிகளுக்கும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் பூஜ்ஜிய வட்டியுடன்கூடிய சமமாதத் தவணை (ஈ எம் ஐ) திட்டம் அறிமுகம் செய்யப்படுவதை இந்நிறுவனம் சமீபத்தில் பெருமிதத்துடன் அறிவித்திருந்தது. கற்பித்தல் மேற்கொள்ளப்படும் வழிமுறையை இந்த முன்னெடுப்பு திட்டம் புரட்சிகரமாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தொழில்நுட்பத்தால் முன்னெடுக்கப்படும் கற்பித்தல் - கற்றல் அனுபவத்தை இந்த டிஜிட்டல் வகுப்பறை வழங்கும். இந்த ஐ எஃப் பி-களின் அறிமுகம் வகுப்பறைகளை நவீனமாக்குவது மட்டுமன்றி சாக்பீஸ்கள் மற்றும் மார்கர்கள் போன்ற பொருட்களுக்கு செலவிடப்படும் தொகையை பள்ளிகள் சேமிக்கவும் உதவும். கூடுதலாக, வழக்கமான கரும்பலகைகள், சாக்பீஸ்கள் போன்றவற்றிலிருந்து டிஜிட்டல் வழிமுறைகளுக்கு மாறுவது, சாக்பீஸ்-ன் துகள்கள் மற்றும் தூசிகளால் ஏற்படுகிற சுவாசப்பாதை பிரச்சனைகளை நீக்கிவிடும்; மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் ஆரோக்கியமான சூழலை வகுப்பறையில் உருவாக்கும்.

குளோபல் ஆஸ்துமா ரிப்போர்ட் என்ற ஆய்வறிக்கையின்படி இந்தியாவில் ஏறக்குறைய 6% குழந்தைகள், அதாவது 30 மில்லியன் சிறார்கள் ஆஸ்துமா பிரச்சனையினால் அவதிப்படுகின்றனர். பள்ளியின் வகுப்பறைகளில் சாக்பீஸ் துகள்கள் போன்ற உள்ளார்ந்த மாசு உருவாக்கல் அம்சங்கள் உட்பட மோசமான காற்றின் தரத்தால் குழந்தைகளில் சுவாசப்பாதை பிரச்சனைகள் மேலும் மோசமாகின்றன என்று உலக சுகாதார நிறுவனம் (டபிள்யூ எச் ஓ) மதிப்பிடுகிறது. சமீப ஆண்டுகளில் இந்தியாவில் டிஜிட்டல் கற்றல் மாபெரும் வளர்ச்சியை கண்டிருக்கிறது. டிஜிட்டல் இந்தியா போன்ற அரசின் முன்னெடுப்புத் திட்டங்கள் மற்றும் இணையத்தின் அதிகரித்துவரும் ஊடுருவல் ஆகியவற்றால் இந்த வளர்ச்சி சாத்தியமாகியிருக்கிறது. தொழில்துறை அறிக்கைகளின்படி இந்திய கல்வி தொழில்நுட்ப (எடுடெக்) சந்தையானது 2025-ஆம் ஆண்டுக்குள் 39.77% சி ஏ ஜி ஆர் விகிதத்தில் வளர்ச்சியடைந்து $10.4 பில்லியன் என்பதை எட்டுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1.5 மில்லியனுக்கும் அதிகமான பள்ளிகள் மற்றும் 260 மில்லியனுக்கும் கூடுதலான மாணவர்களை இந்தியா கொண்டிருப்பதால் டிஜிட்டல் கற்றல் தீர்வுகளுக்கான வாய்ப்பும், சாத்தியத்திறனும் இந்நாட்டில் மிகப்பெரியதாக இருக்கிறது. குயிக்டச் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. கௌரவ் ஜிண்டால் இது தொடர்பாக கூறியதாவது: "கல்வியின் எதிர்காலம் டிஜிட்டல் நிலைமாற்றத்தில் தான் இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இந்த தொலைநோக்கு திட்டத்தின் ஒரு முக்கிய கூறாக இன்டராக்டிவ் ஃபிளாட் பேனல்கள் இருக்கின்றன. பூஜ்ஜிய வட்டியுடன் கூடிய சமமாதத் தவணை என்ற எமது முன்னெடுப்பு திட்டமானது, நிதிச்சுமை இல்லாமல் இந்த நவீன தொழில்நுட்பத்தை செயல்படுத்த பள்ளிகளை ஏதுவாக்குகிறது. கல்வி துறைக்கு மட்டுமன்றி பொது சமூகத்திற்கும் வெற்றியையும், சிறந்த பலன்களையும் தருகிற சூழலை இது உருவாக்குகிறது."

# ஒரே பாரதம் உன்னத பாரதம் இயக்கத்தின் கீழ் காஷ்மீர் இளைஞர்களுக்கான கலாச்சார பரிமாற்ற முகாம் சென்னையில் தொடக்கம்



சென்னை, 10 நவம்பர் 2024: ஒரே பாரதம் உன்னத பாரதம் இயக்கத்தின் கீழ், காஷ்மீர் இளைஞர்களுக்கான கலாச்சார பரிமாற்ற முகாம் சென்னையில் நடைபெற்றது.

ஒரே பாரதம் உன்னத பாரதம் இயக்கத்தின் கீழ், நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் இன்னொரு மாநிலத்துடன் கலாச்சாரம், மொழி, பாரம்பரியம், கல்வி, உணவு என பல துறைகளின் சிறப்பை அறிந்துகொள்ளும் வகையில் ஒவ்வொரு மாநிலமும் அதனுடன் இணைந்துள்ள மாநிலத்தின் சிறப்புகளை அறிந்து கொள்ள இளைஞர் பரிமாற்ற முகாம்கள் வழி வகுக்கின்றன. அந்த வகையில் தமிழ்நாடு- ஜம்மு காஷ்மீர் ஆகியவை ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டத்தின் இணை மாநிலங்களாகும்.

மத்திய உள்துறை அமைச்சகம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சகம், நேரு யுவகேந்திரா உடன் இணைந்து இந்த இளைஞர் பரிமாற்ற முகாம்களை நாடு முழுவதும் நடத்தி வருகின்றன. இந்த ஆண்டு ஜம்மு காஷ்மீரில் இருந்து தீவிரவாதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள 6 மாவட்டங்களைச் சேர்ந்த 132 இளைஞர்கள், சென்னையில் உள்ள இளையோர் விடுதியில் இந்த கலாச்சார பரிமாற்ற முகாம்களில் பங்கேற்றனர். இதற்கான தொடக்க விழா நவம்பர் 09 2024 அன்று சென்னை அடையாறில் உள்ள இளையோர் விடுதியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தென் சென்னையின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் கலந்து கொண்டு முகாமினைத் தொடங்கி வைத்தார்.

இந்த முகாம் ஏழு நாள்கள் நடைபெறும். தினமும் கலாச்சார கலை நிகழ்ச்சிகள், உணவு திருவிழாக்கள் ஆகியவை நடைபெறும். தமிழ்நாட்டிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும் இவர்கள் கண்டுகளிக்க உள்ளனர். கல்லூரிகளில் தேசபக்தி குறித்த கருத்தரங்குகளிலும் அவர்கள் கலந்துகொள்கின்றனர். தமிழ்நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம் குறித்து அவர்கள் அறிந்துகொள்ள இந்த பரிமாற்ற முகாம் வழிவகுக்கும்.

# பிசி ஜுவல்லர் லிமிடெட் நிறுவனத்தில் வாரண்டுகளுக்கு பதிலாக ஈக்விட்டி பங்குகள் ஒதுக்கீடு

சென்னை, 10 நவம்பர் 2024: இந்தியாவில் வேகமாக வளர்ச்சி கண்டு வரும் ஆபரண ரீடெய்ல் சங்கிலித்தொடர் நிறுவனம் என புகழ்பெற்றிருக்கும் பிசி ஜுவல்லர் லிமிடெட், வாரண்டுகளை ஈக்விட்டி பங்குகளாக மாற்றுவதற்கான உரிமைகளை செயல்படுத்தும் விதத்தில் ஒரு வாரண்டுக்கு ரூ. 42.15 (ஒரு வாரண்டுக்கு வெளியீட்டு விலையில் 75%) என்ற விலையில் எஞ்சியுள்ள மொத்த தொகையான ரூபாய் 142,82,52,750 என்பதை பெற்றதன் அடிப்படையில் பங்கு ஒதுக்கீடு செய்யப்படும் புரமோட்டர் அல்லாத பொது வகையினத்தைச் சேர்ந்த 35 நபர்கள்/நிறுவனங்களுக்கு 3,38,85,000 வாரண்டுகளை மாற்றும் செயல்திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் ரூ. 10 முகமதிப்புள்ள 3,38,85,000 ஈக்விட்டி பங்குகளை ஒதுக்கீடு செய்திருக்கிறது. சமீபத்தில், 2024 செப்டம்பர் 30 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டு காலஅளவிற்கான மிகச்சிறப்பான வருவாய் உட்பட நிதிசார் முடிவுகளை இந்நிறுவனம் தெரிவித்திருந்தது. கியூ1 எஃப்ஒய்25 - ல், நுகர்வோர்களின் தேவையும் மற்றும் ஆபரண ஷோரூம்களுக்கு வருகையும் கணிசமான முன்னேற்றம் வெளிப்பட்டது. இந்த உத்வேகமானது, கியூ2 எஃப்ஒய்25 - ல் மேலும் அதிகரித்திருக்கிறது. நிறுவனத்தின் உயர்நிலை மற்றும் கீழ்நிலை செயல்பாடுகள் அனைத்திலும் இந்த முன்னேற்றத்தின் விளைவு மிகத்தெளிவாக புலப்படுகிறது.

கியூ2எஃப்ஒய்25 - ல் ரூ. 505 கோடி என்ற வருவாய் ஈட்டப்பட்டிருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1430% என்ற மாபெரும் வளர்ச்சியை இது குறிக்கிறது. ரூ.129 கோடியாக எபிட்டா மற்றும் ரூ. 124 கோடி வரிக்கு முந்தைய இலாபமாகவும் பதிவாகியிருக்கிறது. எச்1எஃப்ஒய்25 - ல் ரூ. 906 கோடியாக பதிவாகியிருக்கும் வருவாய், முந்தைய ஆண்டின் அளவுடன் ஒப்பிடுகையில், 797% என்ற அபரிமிதமான வளர்ச்சியை எட்டியிருக்கிறது. எபிட்டா மற்றும் வரிக்கு முந்தைய இலாபம், முறையே ரூ.218 கோடி மற்றும் ரூ. 207 கோடி என்ற அளவில் இருக்கின்றன. வங்கிகளுடனான தனது பிரச்சனைகளை சுமூகமாக தீர்த்துக்கொள்ளும் இந்நிறுவனத்தின் முயற்சிகளின் தொடர் நிகழ்வாக கியூ2 எஃப்ஒய்25 காலஅளவின்போது நிதி வழங்கும் கூட்டமைப்பில் இடம்பெற்றிருந்த 14 வங்கிகளின் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளால் நிறுவனம் முன்வைத்த ஒற்றை நேர தீர்வுக்கான ஆஃபர் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2024 செப்டம்பர் 30 அன்று இந்த கூட்டமைப்பில் இடம்பெற்றிருந்த வங்கிகளோடு தீர்வு மற்றும் செட்டில்மெண்ட் ஒப்பந்தத்தை இந்நிறுவனம் செயலாக்கம் செய்திருக்கிறது. இந்த செட்டில்மெண்ட் ஒப்பந்தத்தின் வரையறைகளின்படி பிசி ஜுவல்லர்ஸ் தனது பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறது. இந்த ஒப்பந்த செயலாக்க நேரத்தில் கடன் வழங்கிய வங்கிகளுக்கு திரும்ப செலுத்த வேண்டிய கடனின் ரொக்க அளவில் பாதியை அது செலுத்தியிருக்கிறது. நிறுவனத்தின் முற்றிலும் மாற்றத்தக்க வாரண்ட்களுக்கான முன்னுரிமை வெளியீட்டிற்கு சப்ஸ்கிரைப் செய்த இந்நிறுவனத்தின் புரமோட்டர் குழு நிறுவனங்களிடமிருந்து, இத்தொகையில் ஒரு கணிசமான பங்கு திரட்டப்பட்டிருக்கிறது.

# சென்னையில் 9 விமானங்கள் ரத்து: பயணிகள் அவதி

சென்னை, 10 நவம்பர் 2024: சென்னையில் இன்று 9 விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் அவதி அடைந்தனர்.

சென்னை உள்நாட்டு விமான நிலையம் தமிழகத்தில் முக்கிய விமான நிலையமாக இருந்து வருகிறது. இந்த விமான நிலையத்தில் இருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் விமானம் மூலம் பயணம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் இன்று ஒரே நாளில் 4 புறப்பாடு விமானங்கள், 5 வருகை விமானங்கள் என மொத்தம் 9 விமானங்களின் சேவை திடீரென ரத்து செய்யப்பட்டது. பெங்களூரு, கொல்கத்தா, டெல்லி, புனே, கவுகாத்தி செல்ல இருந்த விமான சேவை ரத்துசெய்யப்பட்டுள்ளதால் பயணிகள் கடும் அவதியடைந்தனர். நிர்வாகக் காரணங்களால் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தரப்பில் விளக்கம் அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்: ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு

சென்னை, 10 நவம்பர் 2024: இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் ஆஸ்திரேலிய அணியின் வீரர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி, ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பார்டர்-கவாஸ்கர் கோப்பையான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் வருகிற 22-ந் தேதி தொடங்குகிறது. இந்த தொடருக்கான இந்திய அணி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான பார்டர்-கவாஸ்கர் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அணியை பேட் கம்மின்ஸ் வழிநடத்த உள்ளார். மேலும் இரண்டு புதுமுக வீரர்களுக்கு அணியில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. பார்டர்-கவாஸ்கர் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி விபரம்: பாட் கம்மின்ஸ் (கேப்டன்), ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் கேரி, ஜோஷ் ஹேசில்வுட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லாபுசேன், நாதன் லியோன், மிட்ச் மார்ஷ், நாதன் மெக்ஸ்வீனி, ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க்.

# ஆவடியில் நடைபெற்ற விமானப்படைத் தேர்வில் ஆள்மாறாட்டம்: வடமாநில இளைஞர் கைது

சென்னை, 10 நவம்பர் 2024: ஆவடியில் நடைபெற்ற விமானப்படை கிளார்க் தேர்வில் ஆள்மாறாட்டம் செய்த வடமாநில இளைஞர் கைது செய்யப்பட்டார்.

மத்திய அரசுக்கு சொந்தமான பாதுகாப்பு படை துறைகளில் ஒன்றான விமான படை பயிற்சி மையம் ஆவடியில் செயல்பட்டு வருகிறது. இங்கு கிளார்க் பிரிவுகளில் ஆட்கள் தேர்வு நடைபெற்றது.இதற்காக பல்வேறு மாநிலங்களில் இருந்து தேர்வு எழுத பலர் வந்திருந்தனர். எழுத்து தேர்வு நேற்று நடைபெற இருந்த நிலையில் ஒவ்வொருவரின் ஹால் டிக்கெட் பரிசோதனை செய்யப்பட்டன.

அப்பொழுது அந்த ஹால் டிக்கெட்டில் மகேந்திரா பிரபு என தேர்வர் பெயரும் புகைப்படமும் இடம்பெற்றுள்ளது. ஆனால் நேரில் வந்திருந்த நபர் வேறு ஒருவராக இருந்ததால் சந்தேகத்தின் அடிப்படையில் விமானபடை அதிகாரிகள் அவரை பிடித்து விசாரித்தனர். விசாரித்ததில் டெல்லி அக்ராவை சேர்ந்த மகேந்திரபிரபு என்பவருக்கு பதிலாக ஹரியானா மாநிலத்தை சேர்ந்த சுஷில் என்பவர் ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுத வந்தது தெரியவந்தது. இதன் பின்னர் விமானபடை அதிகாரிகள் தங்கள் தரப்பு விசாரணையை முடித்து முத்தாப்புதுப்பேட்டை காவல் நிலையத்தில் அந்த இளைஞரை ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட வடமாநில இளைஞர் சுஷில்லிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அதில் ஹரியானவை சேர்ந்த சுசில் மகேந்திரபிரபுவுக்காக ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதி கொடுத்து, அதில் அவர் வெற்றிபெற்று பணி கிடைத்தால் 3 லட்சம் தர வேண்டும் என பேரம் பேசி இருந்தது அம்பலம் ஆகியது. இதனை தொடர்ந்து ஆள்மாறாட்டம் செய்த வடமாநில இளைஞர் மீது வழக்கு பதிவு செய்து முத்தாப்புதுப்பேட்டை போலீசார் அவனை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
RNI No. : TNTAM24940
திகாசி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# டெல்லி கணேஷ் மறைவுக்கு பிரதமர் இரங்கல்



சென்னை, 10 நவம்பர் 2024: ஒப்பற்ற திரைப்பட ஆளுமை திரு. டெல்லி கணேஷ் மறைவிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். அப்பழுக்கற்ற நடிப்புத் திறமையால் ஆசீர்வதிக்கப்பட்ட திரு கணேஷ், ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் அவர் கையாண்ட விதத்திற்காகவும், தலைமுறைகளைக் கடந்து பார்வையாளர்களுடன் இணைக்கும் அவரது திறனுக்காகவும் அன்புடன் நினைவுகூரப்படுவார் என்று திரு மோடி குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது:

"புகழ்பெற்ற திரையுலக ஆளுமை திரு டெல்லி கணேஷ் அவர்களின் மறைவு ஆழ்ந்த வருத்தமளிக்கிறது. அவர் அப்பழுக்கற்ற நடிப்புத் திறமையால் ஆசீர்வதிக்கப்பட்டவர். ஒவ்வொரு பாத்திரத்தையும் அவர் அற்புதமாகக் கையாண்ட விதத்துக்காகவும், தலைமுறைகளைக் கடந்து பார்வையாளர்களை இணைக்கும் திறனுக்காகவும் அவர் அன்புடன் நினைவுகூரப்படுவார். நாடகத்தின் மீதும் ஆர்வம் கொண்டிருந்தார். அவரது குடும்பத்தினருக்கும் ரசிகர்களுக்கும் இரங்கல்கள். ஓம் சாந்தி''.

# பாண்டோமத் இன் பாரத் வேல்யூ ஃபண்ட், ரூ. 2350 மில்லியனை சிறுபான்மை பங்குகளுக்காக ஹல்டிராம் புஜியாவாலா நிறுவனத்தில் முதலீடு செய்கிறது

சென்னை, 10 நவம்பர் 2024: கொல்கத்தாவை தளமாகக் கொண்ட ஹல்டிராம் புஜியாவாலா லிமிடெட், சிறுபான்மை பங்குகளுக்காக இந்த நிறுவனத்தில் ரூ. 2350 மில்லியன் ஐ பாண்டோமத் இன் பாரத் வேல்யூ ஃபண்ட்(பி வி எஃப்) முதலீடு செய்துள்ளதுடன் அதன் தனியார் ஒதுக்கீட்டுப் பங்களிப்பு சுற்று வெற்றிகரமாக முடிவடைந்ததாக அறிவித்துள்ளது. ஹல்டிராம் புஜியாவாலா லிமிடெட் தனது தயாரிப்புகளை "பிரபுஜி" என்ற பிராண்டின் கீழ் விற்பனை செய்கிறது

இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றான திண்பண்டங்கள் சந்தை, நிதியாண்டு 24 இல் ரூ. 426 பில்லியனாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது நிதியாண்டு 32 க்குள் ஒரு 11% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை (சி ஏ ஜி ஆர்) பதிவுசெய்கின்ற ~ ரூ. 955 பில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சந்தையில் ஒரு கணிசமான சந்தைப் பங்கை அனுபவிக்கிற ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்கள், இந்த வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தரம், வசதி மற்றும் பாதுகாப்புத் தரங்களுக்கு ஒரு வலுவான அர்ப்பணிப்புடன் இணைந்த, தயாரிப்பு பல்வகைப்படுத்தலில் அவர்களின் தொடர்ச்சியான கவனம், எதிர்கால விரிவாக்கத்திற்கு அவர்களை நிலைநிறுத்தும்.

ஹல்டிராம் புஜியாவாலா லிமிடெட் 60 ஆண்டுகளுக்கும் மேலாக தின்பண்டங்கள் மற்றும் காரச் சுவையுண்டி தொழிலில் ஒரு வலுவான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம் தனது தயாரிப்புகளை "பிரபுஜி" என்ற பிராண்ட் பெயரில் 100 க்கும் அதிகமான எஸ் கே யூ களுடன் வெளிநாட்டு தயாரிப்பு போர்ட்ஃபோலியோவை வழங்குகிறது, இது மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் விரைவான சேவை உணவகங்களை நடத்துகிறதைத் தவிர வலுவான பிராண்ட் அங்கீகாரத்தை, குறிப்பாக கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்திய சந்தைகளில் பெறுகிறது. இந்த நவீன பிராண்ட் ஆன 'பிரபுஜி' என்பது இந்த நிறுவனத்தின் புது-யுக சந்தைப்படுத்தல் உத்தியால் ஆதரிக்கப்படும் சலசலப்பை ஏற்படுத்தும் வார்த்தையாக மாறியுள்ளது. பாலிவுட் பழம்பெரும் நடிகர்களான ஷாருக்கான் மற்றும் ராஷ்மிகா மந்தனா ஆகியோர் பிராண்ட் அம்பாசிடர்களாக உள்ளனர்.

ஹல்டிராம் புஜியாவாலா லிமிடெட் அதன் சில்லறை வணிகம் அதோடுகூட விநியோக வணிகத்தின் ஒரு சக்திவாய்ந்த கலவையைக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம், நாடு முழுவதும் 200,000 க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனையாளர்களுக்கு சேவை செய்கின்ற சுமார் 2000 விநியோகஸ்தர்களின் விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ளது. நிறுவனம் அதன் நேரடி நுகர்வோர் அணுகலை உருவாக்குகின்ற 19 சில்லறை விற்பனை நிலையங்களையும் 60 ஃபிரான்சைஸ் கடைகளையும் நடத்துகிறது. தற்போது, நிறுவனத்தின் சந்தைகளில் மேற்கு வங்கம், பீகார், ஜார்கண்ட் மற்றும் வடகிழக்கு பகுதிகள் அடங்கும். இந்த நிறுவனம் கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்திய சந்தைகளுக்கு வெளியே அதன் உற்பத்தி மற்றும் சந்தைகளை விரிவுபடுத்த இந்த நிதியைப் பயன்படுத்தும். ஹல்டிராம் புஜியாவாலா லிமிடெட், ஆண்டுக்கு 6,035 மெட்ரிக் டன் (எம் டி பி ஏ) ஒரு கூட்டுத்திறன் கொண்ட மூன்று உற்பத்தி வசதிகளை இயக்குகிறது.

இந்த நிகழ்வு குறித்து பேசிய ஹல்டிராம் பூஜியாவாலா லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. மணீஷ் அகர்வால், "கடந்த 60 க்கும் அதிகமான ஆண்டுகளில், நாங்கள் சுவையான தின்பண்டங்கள் மற்றும் இனிப்புகளை வழங்குவதன் மூலம் ஒரு விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் நிறுவனம் இந்தியாவின் உணவுப் பழக்கம் மற்றும் சுவைகளில் புரட்சியை ஏற்படுத்தி, ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது."என்றார். "பி வி எஃப் இன் ஆதரவுடன் இணைந்து எங்கள் தொழில்துறை நுண்ணறிவுகளை பயன்படுத்துவதன் மூலம், பங்குதாரர் மதிப்பை அதிகரிக்கவும் வளர்ச்சியை தூண்டவும் நாங்கள் மூலோபாய ரீதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளோம். இந்த கூட்டாண்மையானது, அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு வளமான எதிர்காலத்தை உறுதி செய்கின்ற நீண்ட கால பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கு ஒரு உறுதியான அடித்தளத்தை அமைக்கிறது," என்று திரு மணீஷ் அகர்வால் மேலும் கூறினார்.

ஹல்டிராம் புஜியாவாலா லிமிடெட் நிறுவனத்தில் தனது முதலீடுகள் பற்றி பாரத் வேல்யூ ஃபண்ட் நிறுவனத்தின் தலைமை முதலீட்டு அதிகாரி திருமதி மதுலுனாவத் கூறுகையில் "ஹல்டிராம் புஜியாவாலா லிமிடெட் நிறுவனத்துடன் இணைவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். 1958 இல் ஒரு தனிஉரிமையாக நிறுவப்பட்டதிலிருந்து ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக சந்தை நுண்ணறிவுடன் இந்த நிறுவனம், நுகர்வோர் நடத்தை மற்றும் சந்தை போக்குகள் பற்றிய ஒரு ஆழமான புரிதலைக் கொண்டுள்ளது. இந்த நவீன பிராண்டான 'பிரபுஜி' மீது புதிய தலைமுறையின் கூர்மையான கவனம் குறிப்பாக கவனிக்கத்தக்கது. உணவு, எஃப் எம் சி ஜி மற்றும் நுகர்வோர் பொருட்கள் துறைகளில் நாங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம், மேலும் வரவிருக்கும் ஆண்டுகளில் கணிசமான வளர்ச்சியை அடைய ஹல்டிராம் சிறந்த நிலையில் உள்ளது." என்று கூறினார்.

நடுத்தர சந்தைத் துறையில் உள்ள முக்கிய நிதி நிறுவனங்களில் ஒன்றான பி வி எஃப், நீண்ட கால வெற்றியை ஊக்குவிப்பதற்கு இலாபகரமான, வளர்ச்சி-நிலை நிறுவனங்களில் முதலீடு செய்வதில் கவனம் செலுத்துகிறது. ஹல்டிராம் நிறுவனத்தில் செய்யப்பட்ட இந்த முதலீடு கடந்த 3 மாதங்களுக்குள் பி வி எஃப் இன் 6வது ஒட்டுமொத்த முதலீடு மற்றும் நுகர்வோர் சந்தையில் 3வது முதலீட்டைக் குறிக்கிறது. கடந்த மாதத்தின் தொடக்கத்தில், பி வி எஃப் மற்றவைகளுடன், ஒரு தனிப்பட்ட சுகாதார பிராண்டான பம் டம் (மில்லேனியம் பேபிகேர் லிமிடெட்) மற்றும் நுகர்வோர் உபகரண பொருட்கள் நிறுவனமான அனிகேட் மெட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் போன்ற நிறுவனங்களில் முதலீடு செய்தது.

# நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் அங்கமான பிங்க் ரிகார்ட்ஸ் வழங்கும் கேபிஒய் பாலா மற்றும் நியதி நடிப்பில் காதலை கலகலப்பாக சொல்லும் பாடல் 'ராக்காயி'



சென்னை, 10 நவம்பர் 2024: இந்தியாவின் முன்னணி ஊடக தயாரிப்பு மற்றும் திறமை மேலாண்மை நிறுவனமான நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் (Noise and Grains), திரைத்துறை ஜாம்பவான்கள் கலந்துகொள்ளும் பிரம்மாண்ட கலை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக தயாரித்து, உருவாக்கி, நடத்துவதன் மூலம் இந்திய ஊடக வெளியில் தனக்கென ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. யுவன் 360 நிகழ்ச்சி அதன் சமீபத்திய மைல்கல் ஆகும்.

நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் அதன் அடுத்த படைப்பாக நிறுவனத்தின் ஒரு அங்கமான பிங்க் ரிகார்ட்ஸ் வாயிலாக 'ராக்காயி' என்ற பாடலை வழங்குகிறது. கார்த்திக் ஸ்ரீநிவாஸ் மற்றும் மஹாவீர் அஷோக் இதை இணைந்து தயாரித்துள்ளனர். தொலைக்காட்சி பிரபலமான கேபிஒய் பாலா மற்றும் நட்சத்திர தம்பதிகள் சேத்தன், தேவதர்ஷினியின் மகளான '96' திரைப்பட புகழ் நியதி முதன்மை வேடங்களில் இதில் தோன்றுகின்றனர்.

கலகலப்பான காதல் பாடலான 'ராக்காயி' ஏ.கே. பிரியன் இசையிலும், மு.வி. பாடல் வரிகளிலும் உருவாகியுள்ளது. நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் நிறுவனத்தின் இயக்குநரான கார்த்திக் ஸ்ரீநிவாஸ் இப்பாடலை தளபதி விஜய் நடிப்பில் யுவன் ஷங்கர் ராஜா இசையில் சமீபத்தில் வெளியான 'கோட்' திரைப்படத்தில் ஸ்பார்க் பாடலை பாடிய வ்ருஷா பாலு உடன் இணைந்து பாடியுள்ளார்.

இப்பாடலை விர்ச்சுவல் செட் புரொடக்ஷன் டெக்னாலஜி எனும் அதிநவீன தொழில்நுட்பத்தின் உதவியோடு அபு மற்றும் சல்ஸ் இயக்கி நடனம் அமைக்க, பிரம்மாண்ட பொருட்செலவில் கார்த்திக் ஸ்ரீநிவாஸ் மற்றும் மஹாவீர் அஷோக் தயாரித்துள்ளனர்.

விர்ச்சுவல் புரொடக்ஷன் சினிமாவில் எதிர்காலத்தில் முக்கிய பங்காற்றும் என ஆஸ்கர் நாயகன் ஏ.ஆர். ரஹ்மான் சமீபத்தில் கூறியது போல் இந்த நவீன தொழில்நுட்பத்தை 'ராக்காயி' குழுவினர் சிறப்பாக பயன்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

உற்சாகமூட்டும் காதல் பாடலான 'ராக்காயி' பிங்க் ரிக்கார்ட்ஸ் யூடியூப் பக்கத்தில் நவம்பர் 4 அன்று வெளியானது. இப்பாடல் இளைஞர்கள் முதல் அனைத்து தரப்பினரின் வரவேற்பையும் பெறும் என்று நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் மற்றும் பிங்க் ரிகார்ட்ஸ் குழுவினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# துறை அளவிலான புதுமை மூலம் வளர்ச்சியை அதிகரிக்க டாடா இந்தியா இன்னோவேஷன் ஃபண்டை வெளியிட்டுள்ளது டாடா அசெட் மேனேஜ்மென்ட்

சென்னை, 10 நவம்பர் 2024: டாடா அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனமானது டாடா இந்தியா இன்னோவேஷன் ஃபண்ட் துவங்குவதை அறிவித்துள்ளது. இதன் மூலம், புதுமையான திட்டங்கள் மற்றும் துறைசார் வளர்ச்சிகள் வழியாக பயனடைய விரும்பும் நிறுவனங்களில் முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால மூலதனப் பாராட்டுக்கான வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன்படி, என் எஃப் ஓ (புதிய நிதிச் சலுகை) ஆனது நவம்பர் 11, 2024 அன்று சந்தாவிற்கு திறக்கப்படும்.

இந்தியப் பொருளாதாரம் திருப்புமுனை மற்றும் அதிகரிக்கும் கண்டுபிடிப்புகள் ஆகிய இரண்டிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் டிரெண்டினை கண்டு வருகிறது. அவை ஒவ்வொன்றும் தங்கள் துறைகளை மாற்றுவதற்கான வலுவான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. திருப்புமுனை கண்டுபிடிப்புகள், கேம் சேஞ்சிங் முன்னேற்றங்களை உருவாக்குகின்றன. அவை முற்றிலும் புதிய சந்தைகளை உருவாக்குகின்றன, அதே நேரத்தில் அதிகரிக்கும் கண்டுபிடிப்புகள் ஏற்கனவே உள்ள தயாரிப்புகள், சேவைகள் அல்லது செயல்முறைகளை மேம்படுத்துவதை உள்ளடக்கியது.

டாடா இந்தியா இன்னோவேஷன் ஃபண்ட் ஆனது ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (ஆர்&டி) மற்றும் இயந்திர கற்றல், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் மாற்றம் போன்ற தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் இத்தகைய மாற்றமான கண்டுபிடிப்புகளில் முன்னணியில் உள்ள நிறுவனங்களை வணிக ரீதியான திட்டங்களைக்கு சான்றாகும்.

இந்தியாவின் நிதிச் சேவைத் துறையானது, டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி, நாட்டை ஒரு புதிய டிஜிட்டல் சகாப்தத்திற்கு கொண்டு வந்துள்ளது. நாடு முழுவதும் நிதி உள்ளடக்கத்தை கணிசமாக விரிவுபடுத்துகிறது. உலகளாவிய காலநிலை நடவடிக்கை தரநிலைகளுக்கு இணங்க, இந்தியாவின் மின்சார வாகன (ஈ வி) துறை, பேட்டரி தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பிரிவுகள் கணிசமான முதலீடு மற்றும் வளர்ச்சி வேகத்தைக் கண்டுள்ளன. அதே நேரத்தில், மருந்து மற்றும் சுகாதாரத் துறைகளில் கணிசமான ஆர்&டி முதலீடுகள் இந்தியாவை ஆராய்ச்சி மற்றும் உற்பத்திக்கான உலகளாவிய மையமாக நிலைநிறுத்துகின்றன.

இந்திய அரசாங்கத்தின் 'உள்ளூருக்கான குரல்' வணிக திட்டம் மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவான நடவடிக்கைகள் உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீட்டில் நாட்டின் தரவரிசையை கணிசமாக மேம்படுத்தியுள்ளன. 2015 இல் 81 வது இடத்தில் இருந்து 2024 இல் 39 வது இடத்திற்கு நகர்கின்றன. இந்தச் சாதகமான சூழல் புதுமைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் நிறுவனங்களுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது (ஆதாரம்: உலக அறிவுசார் சொத்து அமைப்பு | ஐபி இந்தியா | டைம்ஸ் உயர் கல்வி).

இந்த நிதியை அறிமுகப்படுத்தியதில், டாடா அசெட் மேனேஜ்மென்ட்டின் தலைமை வணிக அதிகாரி ஆனந்த் வரதராஜன் கூறியதாவது: "முதலீடு செய்வதில் இரண்டு விஷயங்கள் முக்கியமானவை: அடுத்த 10+ ஆண்டுகளுக்கு ஒரு நிறுவனத்தை அடையாளம் காண்பது மற்றும் அடுத்த தசாப்தத்தில் பணம் சம்பாதிக்கும் திறன் ஆகியவையாகும். அவற்றில் ஒன்று மட்டும் இருந்தால் போதாது. மற்றவற்றுடன், வெற்றிக்கான உரிமையை அவர்களுக்கு வழங்குவது புதுமை. உயிர்வாழ்வதற்கும் வளர்ச்சிக்கும் உதவுவது ஒன்றுதான். இது அதிகரிக்கும் மற்றும் புதுமையின் மூலம் வருகிறது. புதுமை போட்டி நன்மையையும் முன்னோக்கி நிற்கும் திறனையும் அளிக்கிறது. டிஜிட்டல், உற்பத்தி மற்றும் சேவை கண்டுபிடிப்புகளில் இந்தியா முன்னணியில் உள்ளது, இது ஏராளமான வாய்ப்புகளுக்கு வழிவகுக்கிறது. செழித்து வளருவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களில் இந்த வாய்ப்புகளில் சிலவற்றைப் பெறுவதை இந்த நிதி நோக்கமாகக் கொண்டுள்ளது.



இதுகுறித்து டாடா அசெட் மேனேஜ்மென்ட் தலைமை முதலீட்டு அதிகாரி ராகுல் சிங் பேசுகையில், "நிதி, சுகாதாரத் தொழில்நுட்பம், வாகனத் தீர்வுகள், நுகர்வோர் தொழில்நுட்பம் மற்றும் அதற்கு அப்பால் டிஜிட்டல் மயமாக்கல் மூலம் பல்வேறு துறைகளில் இந்தியா மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. உலகளாவிய கண்டுபிடிப்பு தரவரிசையில் எங்களின் நிலையான உயர்வைக் கட்டியெழுப்புவதன் மூலம், டிஜிட்டல் வர்த்தகம், பசுமை இயக்கம், ஈ வி பேட்டரி உள்கட்டமைப்பு, விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு போன்ற துறைகளில் நாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எடுத்து வருகிறோம். டாடா இந்தியா இன்னோவேஷன் ஃபண்ட் ஆனது இந்த மாற்றங்களைப் பயன்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது, முதலீட்டாளர்களுக்கு இந்த கண்டுபிடிப்பு அலையை வழிநடத்தும் நிறுவனங்களின் வளர்ச்சிக் கதைகளில் பங்கேற்க வாய்ப்பளிக்கிறது" என்றார்.

டாடா இந்தியா இன்னோவேஷன் ஃபண்ட் ஆனது முதலீட்டு வசதி மற்றும் வளர்ச்சி சாத்தியம் ஆகிய இரண்டையும் வழங்கும் கீழ்மட்ட புதுமை-தலைமையிலான பங்குத் தேர்வு அணுகுமுறையைப் பயன்படுத்தும். இந்த நிதியானது சந்தை வரம்புகள் மற்றும் துறைகளில் முதலீட்டு வாய்ப்புகளைத் தேடும். நீண்ட கால முதலீட்டாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த ஃபண்ட், இந்தியாவில் நடந்து வரும் புதுமை அலைகளால் வழங்கப்படும் வாய்ப்புகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.